<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 78/2021

அரசுதரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரசன்னா | வயது | : | 45 |
| தந்தை/கணவர் பெயர் | : | சுப்ரமணியம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 20.11.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 31.08.2018 அன்று புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது காலை 8.00 மணிக்கு இயற்கை உணவகம் அருகில் காவலர்களுடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது TN 63 AZ 3335 லாரி TN22 BQ 9518 டிப்பர் லாரி, TN 48 S 4674 வாகனங்களை சோதனை செய்த போது அதில் சுமார் 3 யூனிட் ஆற்று மணல் இருந்தது. காணொளி மூலம் காண்பிக்கப்பட்ட வண்டிகள் ஓடும் நிலையில் இல்லை. TN 63 AZ 3335 லாரி TN22 BQ 9518 டிப்பர் லாரி, TN 48 S 4674 ஆகியவற்றின் புகைப்படங்கள் சா.பொ.1 முதல் 3 அது சம்பந்தமாக அவர்களிடம் படிவங்கள் கேட்ட போது அவர்கள் காண்பித்ததில் சவுடு மணல் என்று குறிப்பிட்டு இருந்தது.

பிறகு எனது பணி அனுபவத்திலிருந்து அந்த மணல் ஆற்று மணல் என்று தெரியவந்ததால் 3 வாகனங்களையும் அதிலிருந்த மணல்களையும் அங்கேயே தனித்தனியாக போலிசார் சாட்சிகள் முன்பு கைப்பற்றினேன். பறிமுதல் செய்யப்பட்ட 3 வாகனங்களையும் , அதிலிருந்த மணலையும் மற்றும் 3 ஓட்டுநர்களையும் காவல் நிலையம் கொண்டு வந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தனிஅறிக்கை கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தனிஅறிக்கை நான் கொடுத்தது தான். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.1** ஆகும். அதன் அடிப்படையில் புதுச்சத்திரம் காவல் நிலைய குற்ற எண் 170/2018 சட்ட் 379 430 IPC and 21(1) Mines Minerals Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** நான் கைப்பற்றிய மணல் ஏற்றி வந்ததற்கான பர்மிட் **அ.த.சா.ஆ.3 முதல் அ.த,சா.ஆ.5** ஆனால் எதிரிகள் கடத்தி வந்தது ஆற்று மணல் தான் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எங்கள் காவல் நிலையத்திற்கும் வாகன தணிக்கை செய்த இடத்திற்கும் இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். வாகன சோதனைக்கு 7.00 மணிக்கு கிளம்பினோம், 8.00 மணிக்கு தணிக்கை செய்தோம். இந்த விவரத்தினை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. தனி அறிக்கையில் 7.00 மணிக்கு கிளம்பியதாக சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை ஆனால் 8.00 மணிக்கு தனிக்கை செய்ததாக சொல்லியுள்ளேன்.

எந்த பணி அனுபவத்தின் மூலம் அந்த மணல் சவுடு மணல் இல்லை, ஆற்று மணல் என்று தெரிந்து கொண்டேன் என்றால் இது சம்பந்தமாக வழக்கின் புலனாய்வு அலுவலர் சோதனைக்கு அலுவலகத்திற்கு அனுப்புவார். சவுடு மணலுக்கும், மணலுக்கும் வித்தியாசம் எப்படி தெரியும் என்றால் ஆய்வுக்கு அனுப்பு புலனாய்வு அலுவலர் முடிவு செய்தார். ஆய்வுக்கு மணல்அனுப்பப்பட்டதா என்றால் புலனாய்வு அலுவலருக்கு தான் தெரியும். மணல் என்று தெரியாமல் எப்படி கைப்பற்றினேன் என்றால் எனது பணி அனுபவத்திலிருந்து அந்த மணல் ஆற்று மணல் என்று தெரியவந்ததால் கைப்பற்றி ஒப்படைத்தேன். இந்த வழக்கில் எதிரிகள் சவுடு மணல் ஏற்றி வந்தவர்கள் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழக்கப்பட்ட பர்மிட் ரசீது உள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதின் அடிப்படையில் ரசீது வழங்கிய நபர்களை உண்மையில் அங்கிருந்து தான் மணல் ஏற்றி வரப்பட்டதா என்று விசாரித்து தனி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த மணலும் எதிரிகள் எடுத்துவரவில்லை என்பதும் அரசால் நியமனம் செய்த சவுடு மணலை தான் ஏற்றிவந்தார்கள் என்பதும் அதிகாரி உத்திரவின் பேரில் தனி அறிக்கை கொடுத்தேன் என்பதும் சரியல்ல. 161(3) கு.வி.மு.ச வாக்குமூலத்தில் கனிம வளம் மற்றும் நீர் வளம் பாதிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்பதால் எந்த இடத்திற்கு சென்று சோதனை செய்து குறிப்பிட்டேன் என்றால் பொதுவாக ஆற்று மணலை எடுத்தால் பாதிக்கப்படும் என்பதால் அப்படி தான் குறிப்பிட்டேன் சோதனை செய்த இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான்.

கைப்பற்றிய போது இருந்த போலிசார் எனக்கு கீழ் பணி செய்பவர்கள் என்றால் சரிதான். தனிப்பட்ட நபர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த தனி அறிக்கை தவறானது என்றால் சரியல்ல. என்னிடம் அனுமதி சீட்டினை கொடுத்தும் நான் அதிகார துஷ்புரோயகம் செய்து தனி அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆற்று மணல் ஏற்றிசென்றார்கள் என்பதற்காக எந்த சான்று தாக்கல் செய்தேன் என்றால் புலனாய்வு அலுவலர் ஆய்விற்கு அ னுப்பு அந்த அறிக்கையை தாக்கல்செய்துள்ளார். நான் புவியியல் சார்ந்த கல்வி பயின்றுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் கடத்தி வந்த மணலையும் சவுடு மணலையும் கைப்பற்றி இந்த வழக்கில் பகுப்பாய்வு ஆய்விற்கு உட்படுத்தியுள்ளேனா என்றால் புலனாய்வு அதிகாரி தான் அனுப்புவார். நான் தவறான தனி அறிக்கை தாக்கல் செய்தேன் என்பதும் எனக்கு மணல் எது சவுடு மணல் எது என்று தெரியாது என்றால் சரியல்ல.